**தொடன்கொட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 13 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தொடன்கொட பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட 73 காணி கட்டிடங்களின் கிரயம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | ரூபா 994,679 பெறுமதியான 08 பொருட்பதிவு விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் விற்பனை செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட 81 விடயங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஊழியர் ஓய்வகம் மற்றும் வாராந்த சந்தை கொட்டடகைகளை நிர்மாணித்தல் மூலதனமாக்கும் போது முறையே ரூபா 410,939 மற்றும் ரூபா 465,596 தொகைகள் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | | சகல காணி கட்டிடங்களும் வருடத்திற்கு ஒரு முறையேனும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக் கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் இந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். | | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டிய 43 நிறுவனங்களுக்காக அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டி ருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பணிகள் நாளது வரையாக்கப்பட்டுள்ள து. என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,531,261 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,915,086 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,462,000 | 10,027,384 | 9,544,058 | 483,325 | 7,065,000 | 6,842,605 | 6,277,557 | 565,048 |
| (ii) | வாடகை | 2,594,000 | 2,720,421 | 2,684,971 | 35,450 | 2,010,000 | 2,056,971 | 1,996,671 | 60,300 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,313,600 | 452,828 | 452,828 | - | 1,076,500 | 795,028 | 795,028 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 49,828,250 | 39,568,412 | 7,496,751 | 32,071,660 | 37,244,500 | 39,054,749 | 9,174,658 | 29,880,090 |
| | | 64,197,850 | 52,769,045 | 20,178,608 | 32,590,431 | 10,151,500 | 48,749,353 | 18,243,914 | 30,505,438 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதன வரி நிலுவையில் 01 - 03 வருடங்களுக்கு இடையே 778 அலகுகளுக்கான நிலுவை ரூபா 468,015 தொகையும், 04 – 10 வருடங்களுக்கு இடையிலான 148 அலகுகளுக்காக நிலுவை ரூபா 284,338 தொகையும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட 221 அலகுகளுக்கான ரூபா 418,239 தொகையும் காணப்பட்டது. | நிலுவை ஆதன வரி வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்வரும் சில மாதங்களுக்குள் இந்த நிலுவைப் பணத்திலிருந்து அறவிடக் கூடிய ஆகக் கூடிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப் பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்ற | நிலுவை வருமானம் | முன்னைய ஆண்டுகளில் கிடைத்த தொகையினை விட அதிகமான |

| | | |
|---|---|---|
| தண்டப் பண வருமானம் ரூபா 21,500,280 ஆகும். | அறவிடப்பட வேண்டும். | தொகையொன்று சிட்டையிடப்பட்டமையின் காரணமாக இந்த நிலுவை ஏற்பட்டிருந்தது. காணப்படுகின்ற கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையில் இந்த நடவடிக்கைகள் தமாமதமடைந்திருந்தன. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| செயற்திட்ட அமுலாக்கம் தொடர்பாக முறையான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | |
| உக்கும் கழிவுப் பொருட்களுக்காக கூட்டுப் பசளை செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. மொத்த சபை அதிகாரப் பிரதேசத்தையும் மேவுகை செய்யும் வகையில் கழிவுப் பொருள் சேகரித்தல் இடம்பெறாதிருந்ததுடன், கழிவுப் பொருள் விதித்தலால் ரூபா 260,400 வருமானம் மாத்திரம் கிடைத்திருந்தது. கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக உப விதியொன்றை விதித்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் கழிவுப் பொருட்கள் கொண்டு போடப்படும் நிலத்திற்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரமும் | கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | கழிவுப் பொருள் முகாமைத்துவத்தற்காக காணியொன்று காணப்படாத பிரச்சினை இந்த சபைக்கும் தாக்கமளித்திருந்தது. காணியொன்றை பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், சதுப்பு நிலத்தை அண்மித்த சுற்றாடல் முறைமைகளில் பாதிப்பு ஏற்படும் வகையில் கழிவுப் பொருட்கள் கொண்டு போடப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 45 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக எந்தவொரு சமூக சபையும் ஸ்தாபித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமூக சபைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். | உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இந்த பணிகள் கையளிக்கப்பட்ட போதிலும், அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமையை அறியத்தருகின்றோம். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 07 பதவிகளுக்குரியதாக காணப்பட்ட 07 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) உள்ளூராட்சி திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி நாட் கூலி அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சம்பள கொடுப்பனவாக ரூபா 983,508 செலவிடப்பட்டிருந்தது | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் வெற்றிடமாக உள்ள மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்த்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | மாதாந்த பொதுக் கூட்டத்தின் போது பதவியணியினரை சேர்த்துக் கொள்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர் காலத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 நூலக புத்தகங்களின் மெய்மெய்யாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2004 சனவரி 26 ஆம் திகதிய 2004/நூலகம்/01 தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபையின் சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் நூலகங்கள் தொடர்பான வருடாந்த இருப்பு மெய்மெய்யாய்வு கட்டாயமாக மேற்கொள்ளப்பட்டு மெய்மெய்யாய்வு சபை அறிக்கை 03 மாதங்களுக்குள் அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும், இறுதி தடவையாக மெய்மெய்யாய்வு சபை செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டின் கட்டளைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் இந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

### 3.4.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| டயர் மற்றும் டியூப் என்பவற்றின் தேவை தொடர்பாக சரியான ஆய்வு செய்யப்படாமல் மீளாய்வாண்டில் 54 டயர்கள் மற்றும் 38 டியூப்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ஆண்டின் இறுதியின் போது ரூபா 813,650 பெறுமதியான 69 டயர் மற்றும் டியூப்கள் பயன்படுத்தப்படாமல் இறுதி இருப்பாக காணப்பட்டது. | வருடாந்த தேவையினை கருத்தில் கொண்டு அதன் பிரகாரம் கொள்வனவுகள் செய்யப்பட வேண்டும். | எஞ்சிய டயர்களில் 10 டயர்கள் 2020 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

### 3.4.3 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 1,858,000 பெறுமதியான CFL மற்றும் LED வீதி விளக்குகளின் 397 தொகுதிகள் கொள்வனவு செய்யும் போது | கொள்வனவு செய்தல்கள் மேற்கொள்ளும் போது ஆகக் | இரண்டு நிறுவனங்களில் இருந்து மாத்திரம் மாதிரிகள் |

| | | |
|---|---|---|
| தரத் தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தல் ஒன்று இன்றி தரத்தில் உயர் தரமானது என குறிப்பிடப்பட்டு ஆகக் குறைந்த விலையினை விட அதிகரித்த விலையில் நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டமையினால் ரூபா 594,450 மேலதிக செலவொன்று செய்யப்பட்டிருந்தது. | குறைந்த விலையினை கவனத்தில் கொள்ளாமல் தரத் தன்மையினை கவனத்தில் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டிருக்கு மாயின் அது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை ஊடாக சரியான பிரகாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். | பெறப்பட்டிருந்தன. மாதிரி பரிசோதனை செய்யப்பட்டு நிதிக் குழுவின் தீர்மானம் பெறப்பட்டுள்ளது. |

**3.5 தீர்வுகாணப்படாதுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 செப்தெம்பர் 13 ஆம் திகதி நடைபெற்ற மாகாண அரசாங்க கணக்குகள் செயற்குழுவினால் 2011 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 2.4(அ), (ஊ) மற்றும் 2012 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 2.1.1(அ) ஆம் பந்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கட்டளைகள் 2020 யூன் 01 ஆம் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |